ஆய்வுச்சுடர்: பன்னாட்டு பன்முகத்தமிழ் மின்-ஆய்விதழ் ISSN NO.2581-5938
ANJAC, SIVAKASI, TAMILNADU, INDIA மலர்-2, இதழ்-1, சனவரி 2019

# இந்தி மொழி கவிஞர்கள் மீராபாய் மற்றும் கபீர்தாஸ் ஆகியோரின் வாழ்வியலும் படைப்பியல்பும் - சிறு ஒப்பீடு

**இரா. இராம்பிரசாத்**

உதவிப் பேராசிரியர், வேதியியல் துறை, அய்ய நாடார் ஜானகி அம்மாள் கல்லூரி
சிவகாசி - 626124, தமிழ்நாடு, இந்தியா.

**முன்னுரை**

இந்தியாவின் தலைசிறந்த புகழ்பெற்ற கவிஞர்களுள் பெயர் பெற்றோர் மீராபாய் மற்றும் கபீர்தாஸ் ஆவர். இருவரும் மறைபொருள் கவிதைகள் படைப்பதில் வல்லவர்கள். இவர்கள் இந்தியாவில் மட்டுமல்லாமல் உலகளாவிய அளவில் புகழ்பெற்றவர்கள் இந்தியாவில் இன்றும் பல கோவில்களில் ஒலித்துக்கொண்டிருக்கும் மீராபாயின் தெய்வீகப் பாடல்கள் மற்றும் இறையாண்மையில் உள்ள கசப்பான உண்மைகளை உடைத்துக் காவியம் படைத்த கபீர்தாஸ் ஆகியோர் படைப்புகளை ஒப்பிட்டு ஆய்வதை இக்கட்டுரை நோக்கமாகக் கொண்டுள்ளது.

**மீராபாய் அவர்களின் வாழ்வியல்**



மீராபாய் அவர்கள் டெல்லி-ஜோத்பூர் இடையேயான தேகானா சந்திப்பின் தென்கிழக்கு பகுதியில் உள்ள பஜோலி எனும் குக்கிராமத்தில் 15.4.1498 அன்று பிறந்தார்.

மீராபாயின் பெற்றோர்கள் ரத்தன்சி தூதவாத் மற்றும் குசும்ப் கன்வர் ஆவர். மீராபாய் ராஜஸ்தானில் உள்ள குர்கி எனும் ஆற்றங்கரையில் குழந்தையாகக் கண்டெடுக்கப்பட்டு ரத்தன்சி எனும் குறுமன்னரால் வளர்க்கப்பட்டவர்.

தனது சிறு வயதில் தாயை இழந்தார். தனது பெரியப்பா விராம்தோவிடம் தஞ்சம் புகுந்தார். தனது அறியாப் பருவத்தில் திருமணம் என்றால் என்னவென்று தெரிந்து கொள்ளப் பலரிடம் வினவிய காலத்தில் விளையாட்டாக இறைவன் கிருஷ்ண பரமாத்வைப் பதியாக மனதில் பதித்துக் கொண்டார். ஒவ்வொரு நாளும் மன்னருடன் கோவிலுக்குச் செல்லும் போதெல்லாம் கண்ணனின் சிலைக்குப் பாலாபிஷேகம் செய்து வந்தார். ஒரு நாள் மீராபாய் தான் கொண்டுவந்த பாலைக் குடிக்கும்படி கிருஷ்ணனின் சிலை முன்பு அழுது அடம்பிடித்து மன்றாட அந்த பரமாத்மா கிருஷ்ண பகவான் அவர் முன் தோன்றி காட்சியளித்துப் பாலைக் குடித்ததாக கதை இன்றும் வைணவ கோவில்களில் சிறப்பம்சமாகக் கூறப்படுகின்றது. மீராவினால் வழிபாடு செய்யப்பட்ட அந்தக் கண்ணனின் சிலை இன்றும் மெர்டா கிராமத்தில் உள்ள மீரா கோவிலில் சார்புஜா எனும் சிலைக்கு அருகில் நீங்காப் புகழ் பெற்றதாய் அமைந்திருக்கிறது.

மீராபாய் அவர்களுக்கு கி.பி.1517 இல் மீவார் மகாராணா அவர்களின் புதல்வர் போஜ்ராஜ் சங்காவத் அவர்களுடன் 19-ஆவது வயதில் திருமணம் நடந்தது. கி.பி.1523இல் ஆறு வருடங்களுக்குப் பிறகு தனது கணவனை இழந்தார். இவரது கொளுந்தனார் ராணாஜி இவருக்கு எதிராகச் செயல்பட்டார் என்றும் கி.பி.1534இல் இவர் மீளாப் பயணம் மேற்கொண்டு மறைந்து போனார் என்பது வரலாறு. ஒவ்வொரு முறை அவர் பூஜையின் போது கோவிலுக்குள் தனிமையில் செல்வதும் மக்கள் வெளியே காத்திருப்பதும் வழக்கமாக இருந்து வந்தது. ஒருநாள் மீராபாய் கோவிலுக்குள்ளேயே மறைந்து காணாமல் போய்விட்டார் என்றும் தெய்வமாக மாறிவிட்டார் என்றும் இன்றளவும் மக்கள் நம்பிக்கை கொண்டு வணங்கிக் கொண்டுள்ளார்கள்.

**கபீர்தாஸ் அவர்களின் வாழ்வியல்**

கபீர்தாஸ் அவர்கள் பனாரஸ் ஆற்றங்கரையில் கண்டெடுக்கப்பட்டு ஒரு முகம்மதிய தம்பதியினரால் வளர்க்கப்பட்டவர் எனவும், ஒரு பிராமண குலத்தில் பிறந்து ராமநாத் என்பரை மானசீகக் குருவாக ஏற்றுக்கொண்டு வளர்ந்தவர் எனவும் கூறுகின்றனர். இருப்பினும் இந்துக்களாலும் சூபி முஸ்லிம்களாலும் கபீர்தாஸ் நேசிக்கப்படுபவராகத் திகழ்கின்றார். கபீர்தாஸின் பிறப்பு

வாய்மொழியால் பெறப்பட்டதே. அதில் சில ஆகமங்கள் அவரின் பிறப்பு-இறப்பு குறிப்பானது 1205 முதல் 1505 வரை என்றும் சில ஆகமங்கள் 1437 முதல் 1497 வரை என்றும் கூறுகின்றன. சில ஆகமங்களில் அவரது இறப்பு 1505 மற்றும் 1575 ஆகிய வருடங்களுக்கிடையில் இருப்பதாகத் தகவல் உள்ளது.



கபீர்தாஸ் அவர்கள் பல இடங்களுக்கு ஞானச் சுற்றுலா மேற்கொண்டவர். ஒரு தாசிப் பெண் இவரது நன்னடத்தையால், தன் மனதை மாற்றித் தானும் துறவியாக மாறிய வரலாறு புகழ் பெற்றதாகும். கபீரைச் சந்திக்க வந்த ஒரு பாமரன், அவர் அருகில் பன்றி ஒன்று கட்டிப் போடப்பட்டிருந்ததை அருவெறுப்பாகக் கண்டு ஒதுங்கினார். நம் உடலில் ஐந்து பன்றிகள் குடிகொண்டிருக்கிறது என்ற சித்தாந்த அறிவை அவருக்குப் புகட்டியதின் காரணமாக அந்தப் பாமரன் அவரது சீடரானார் என்பது சிறப்பு வரலாறு. கபீரின் உயரிய சக்தியை மக்கள் பாராட்டத் தொடங்கினர். இதைக் கண்டு வெறுப்படைந்த மன்னர் சிக்கந்தர் லோடி, கபீரை விரட்டயடித்தார். கபீர்தாஸ் மரணமடைந்த பிறகு இந்துக்களும் முஸ்லீம்களும் இணைந்து அவரை நல்ல முறையில் அடக்கம் செய்தனர்.

**கவிஞர்களின் படைப்புகளில் இறைபக்தி**

மீராபாயின் படைப்பு உணர்வுகள் நிறைந்தது. கபீர்தாஸின் படைப்புகள் தத்துவம் நிறைந்தது. மீராபாயின் படைப்புகள் பஜனை (भजन) எனும் வடிவிலும், கபீர்தாஸின் படைப்புகள் கிரந்தம் (बीजक) எனும் வடிவிலும் தொகுக்கப்பட்டுள்ளன.

மீராபாய் அவர்கள் எமது வலி குறையவில்லை(ஆமோர் செக்கௌ கம்மஸ் சுவாஸ்), மீராவும் நானும், முக்தி மற்றும் மீராவின் நீதிப் படைப்பு (மீரம் ரச்னா சஞ்சயானா) ஆகிய நூல்களை வெளியிட்டுள்ளார்கள்.

மீராபாய் அவர்கள் உணர்வுப் பூர்வமான படைப்புகளை கபீர்தாஸ் போன்றே கருத்து வெளிப்பாட்டுடன் விளக்குவதில் சிறப்புப் பெற்றவர். ஈடு இணையில்லாப் படைப்பினை வழங்கியுள்ளார். 'மேகங்கள் கர்ஜிக்கின்றன; ஆனால் ஹரியின் செய்தி வரவில்லை; மேக மூட்டத்தால் மயிலின் சிறகு விரிகிறது; குயிலின் குரலும் ஒலிக்கிறது; கருமேகத்தின் இருட்டில் மிளிரும் இடியின் அழுகை விரக்தியின் நெருப்பாய் எனது தாகத்தை எரிக்கிறது; அது ஹரியைக் காணத் துடிக்கும் தாகம்!' என்ற பொருண்மையிலான பாடலை,

मतवारो बादल आयें रे ! हरी को संदेसों कछु न लायें रे !
दादुर मोर पापीहा बोले ! कोएल सबद सुनावे रे !
काली अंधियारी बिजली चमके ! बिरहिना अती दर्पाये रे !
मन रे परसी हरी के चरण ! लिसतें तो मन रे परसी हरी के चरण

என்ற சான்று நிறுவுகின்றது.

கபீர்தாஸின் கபீரின் ஈரடி சந்தங்கள் (कबीर के दोहे), நிரஞ்சன் யார் ? (निरंजन कौन है?)மற்றும் அவதூரும் அவமானங்களும் (अवधू और अवधूत) போன்ற படைப்புகள் சிறப்புப் பெற்றவை. கபீர்தாஸ் குறள் வடிவ ஈரடிச் சந்தங்கள் படைப்பதில் புகழ்பெற்றவர். தமிழில் திருவள்ளுவரின் திருக்குறள் போன்று உலகளாவிய அளவில் கபீர்தாஸின் ஈரடிச் சந்தங்கள் மதிக்கப்படுகின்றன. அவற்றில் பாமர மக்களுக்குத் தேவையான அறிவுரைகளை வழங்கியுள்ளார். இதைப் படிப்பவர்களுக்கு ஞான வெளிப்பாடு கிடைக்கும். இவர் பல தத்துவக் கருத்துகளை நுண்ணறிவுடன் இயல்பான சான்றுகளுடன் சந்தங்களில் அமைத்திருப்பார்.

बडा हूआ तो क्या हूआ जैसे पेड़ खजूर।
पंथी को छाया नही फल लागे अति दूर ॥

கபீர்தாஸின் இந்த ஈரடிப்பா, "உருவம் பெரிதானால் பலனும் பெரிதென எண்ணுதல் சரியல்ல, சான்றாக, பனைமரம் உயரத்தில் பெரியது, நிழலும் பழமும் பெறமுடியாது" எனும் கருத்தை பாமரருக்கும் புரியும் விதத்தில் கூறியுள்ளது.

**நிறைவுரை**

மீராபாய் மற்றும் கபீர்தாஸ் இருவரும் பக்தியில் ஆழ்ந்தவர்கள். பல இன்னல்களுக்கு இடையில் பக்தியின் நெறியை மக்களிடம் விதைத்தவர்கள். கடவுள் கொள்கையை கவிதையாய்த் திணிப்பதில் வல்லவர்கள். தன்னலமற்ற வாழ்வு வாழ்ந்தவர்கள். மீராபாய், பரந்தாமன் கிருஷ்ணனைப் பற்றி கவிதைகள் படைததாலும் ஆன்மாவின் இறையன்பு, மனிதநேய இறைவழிபாடு ஆகியவற்றைத் தனது கவிதைகளில் அழகுறப் புனைந்தார். ஆனால் கபீர்தாஸ் அவர்கள் சிலையற்ற ஓரிறையை வலியுறுத்தினார். சிலைவணக்கம், அவதாரம், விரதம், கோயில் மற்றும் பள்ளிவாசல் ஆகிய எதையும் ஏற்றுக்கொள்ளாதவர்.

மீராபாய் அவர்களின் படைப்புகளில் உணர்வைத் தூண்டும் கருத்துகளும் கபீர்தாஸின் படைப்புகளில் அறிவைத் தூண்டும் கருத்துகளும் பதிவு பெற்றுள்ளதை ஆய்ந்தறிய ஆய்வு வழிகோலுகின்றது.

## MEERA BAI AND KABIR DAS : A BRIEF COMPARATIVE STUDY OF THEIR LIFE AND CONTRIBUTION TO BAKTHI LITERATURE

**R. Ramprasath**

MeeraBai (1498-1546) was a Hindu mystic poet of the Bhakti movement. MeeraBaiand Kabir Das were renowned poets of India. Both are famous for their poetry with vivid imagination. MeeraBaiwas born into family of Merta, Rajasthan, India. Most legends about Meera mention her fearless disregard for social and family conventions, her devotion to Lord Krishna, her treating Krishna as her husband, and she being persecuted by her in-laws for her religious devotion. She has been the subject of numerous folk tales and thousands of devotional poems in passionate praise of Lord Krishna. These poems are commonly known as bhajans, and are popular across India. She referred to the Lord, whom she saw as her husband. She even called him the husband of her soul. Due to her mother, her in-laws disapproved of her public singing and dancing as she belonged to a Royal Family of Mewar and was a princess. But she had too much love for her god and sacrificed everything, even her family, for god and attained Moksha through Bhakti Yoga. Kabīrwas a 15th-century Indian mystic poet and saint, whose writings influenced Hinduism's Bhakti movement. Kabir's verses are found in Sikhism's scripture Guru Granth Sahib. His most famous writings include his dohas or couplets.Kabir is known for being critical of both Hinduism and Islam, stating that the former was misguided by the Vedas, and questioning their meaningless rites of initiation such as the sacred thread and circumcision respectively. During his lifetime, he was threatened by both Hindus and Muslims for his radical views. Kabir suggested that True God is with the person who is on the path of righteousness, and thus considered all creatures on earth as his own self, and was passively detached from the affairs of the world. Both MeeraBai and Kabir Das are religious poets whereas Meera's poetry is filled with emotions and Kabir's poetry is filled with philosophical views.